# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண்.86/2022

**வா.சா.1** - நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 10-04-2026

பெயர் = பானுமதி **வா.சா.1**

**வா.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) தாவா வழக்கின் பிராது சொத்து விபரத்தின் சர்வே எண் 422/14 என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு பூர்வீக பாத்தியப்பட்டது என்று எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றால் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றும், குறிப்பிட்டுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.2 ஆவணமான உயிலிலும் தாவா சொத்தின் சர்வே எண் குறிப்பிடவில்லை என்றும், சர்வே எண் 235/2 ஏ தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(2) வா.சா.ஆ.2 ஆவணத்திலும் கிரையப்பாத்தியப்பட்ட சொத்து என்று தான் சரத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிராது சொத்து விபரத்தில் நான்கு மால்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எல்லம்மாள் என்பவர் எனது தாயாரா என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் எல்லம்மாள் என்பவரின் பெயருக்கு சர்வே நம்பர் 422/15 க்குதான் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் குருசாமி நாயக்கர் என்பவரின் பெயருக்கு சர்வே எண் 422/14 ற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** எனது வீட்டின் பின்பக்கம் தான்

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.04.10 18:02:13 +0530

என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் என்றால் சரிதான். மேற்படி புகைப்படம் **பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(3) பிராது தாக்கல் செய்வதற்கு முன்பே தாவா சொத்தை அளவீடு செய்ததில் தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்று தெரிந்திருந்தும் பொய்யான விபரங்களைச் சொல்லி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிராதில் பத்திரத்தின் அளவுகள் தவறாக உள்ளது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் போர்வெல் போடும்போது தான் பிரச்சனை எழுந்தது என்றும், பிரதிவாதி மோசடியாக தாவா சொத்திற்கு பட்டா வாங்கியுள்ளார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு உரிய ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றும், ஆகையால் பிராதுப்படி தீர்ப்புக்கோர முடியாது என்றால் சரியல்ல.

(4) எனக்கு பாத்தியப்பட்ட சொத்து சர்வே எண் 422/15 என்றும் பிரதிவாதிக்கு சர்வே எண் 422/14 தான் பாத்தியம் என்றும், ஆனால் வழக்கிற்காக பொய்யான சங்கதிகளை கூறி பிராதை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிராது தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P
Date: 2026.04.10 18:02:20 +0530